# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

CC.No.133-2024 LW.2 PW.2

| Name | திரு.ரஞ்சித்குமார் | Father / Husband Name | வேலப்பன் |
|---|---|---|---|
| Village | டி.அகரம் | Taluk | திட்டக்குடி |
| District | கடலூர் | Age | 19 |
| | | Time | 12.50 |

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 07.05.2026 நாளாகிய இன்று திரு..M.ஆசிப் முகமது பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**1 முதல் 4 எதிரிகள் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் டி.அரகம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் பெண்ணாடத்தில் உள்ள டாப் டக்கர் துணி கடையில் சேல்ஸ்மேனாக வேலைசெய்துவருகிறேன். அசா.1 னை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 23–04–2024 ம் தேதி இரவு 10.30 மணியளவில் அ.சா.1 ன் பாட்டி ஊரான டி.அகரம் செல்வதற்காக இருச்சக்கர வாகனத்தில் நானும், அசா.1, விக்ரம் ஆகியோருடன் பெண்ணாடத்திலிருந்து டி.அகரம் சென்றபோது அப்போது இரவு 11.30 மணியளவில் டி.அகரம் மாரியம்மன்கோவில் அருகே சென்றபோது அங்கு நின்றுகொண்டிருந்த நான்கு தெரியாத நபர்கள் எங்களை வழிமறித்து அசிங்கமாக தகாத வார்த்தைகளால் திட்டி, என்னை யார் கையால் அடித்து கீழே நெட்டி தள்ளினார்கள் என்றும், யார் கொலை மிரட்டல்விடுத்தார்கள் என்றும் சரியாக தெரியவில்லை மற்றும் இந்த வழக்கை பற்றிய விபரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரணைசெய்யவில்லை. ( தற்போது எதிரிகளுடன் அசா.1 ம் மற்றும் நானும் சமாதானமாக போவதால் சமாதான மனுவில் நான் கையொப்பம்செய்துள்ளேன். )

**அரசு தரப்பில்சாட்சி சம்பவத்தை சாட்சி புகாரிலும், போலிஸாரின் விசாரணையிலும் போலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துவிட்டு எதிரிக்கு பவ்வியப்பட்டு மறைத்து சாட்சியம் அளிப்பதால் பிறழ்சாட்சியாக பாவிக்க கோரினார் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சிய ச.பி 154(1) ( பி.எஸ்.ஏ பிரிவு 157(1) ) கீழ் குறுக்கு விசாரணை**

1. கடந்த 23–04–2024 அன்,று இரவு 10.30 மணியளவில் பெண்ணாடம் டாப் டக்கர் துணி கடையில் வேலைசெய்யும் என்னையும் மற்றும் விக்ரம் மற்றும் அசா.1 ஆகியோருடன் விக்ரமுக்கு சொந்தமான இருச்சக்கர வாகனத்தில் அசா.1 ன் பாட்டி ஊரான டி.அகரம் செல்வதற்காக டி.அகரம் மாரியம்மன்கோவில் அருகே இரவு 11.30 மணியக்கு சென்றபோது ஆஜர் எதிரிகள் எங்களை

வழிமறித்தார்கள் என்று சொன்னால் ? சரியல்ல.

2. ஆஜர் எதிரிகள் எங்களை பார்த்து அசிங்மாக தகாத வார்த்தைகளால் திட்டி, எதிரி ராமலிங்கம் கீழேகிடந்த மரக்கட்டையை எடுத்து அசா.1 ன் தலையில்அடித்தார் என்றாலும், எதிரி ஸ்ரீராம் கீழேகிடந்த பிளாஸ்டிக்கை எனது கையில் அடித்தார் என்றாலும் மற்றும் மற்ற எதிரிகளான தமிழ்குமரன், ஞானசேகரன் என்னை கையாலால் அடித்தார்கள் என்றுசொன்னால் ? சரியல்ல.

3. அப்போது தடுக்க வந்த என்னை எதிரிகள் அசிங்கமாக தகாத வார்த்தைகளால் திட்டி, எதிரி தமிழ்குமரன் கையால் அடித்து கீழேஇடித்து தள்ளினார் என்றாலும், எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்துகொண்டு எங்களை பார்த்து கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று சொன்னால் ? சரியல்ல..

4. நான் சம்பவத்தை நேரில் பார்த்து விலக்கிவிட்டுவிட்டு போலிஸார் விசாரணையிலும் அனைத்து உண்மைகளையும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக போவதால் எதிரிகளை காப்பாற்றுவதற்காக பிறழ்சாட்சியாக மாறி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் ? சரியல்ல.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**
**மறு விசாரணை இல்லை.**

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**

**TITTAGUDI**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

CC.No.133-2024 LW.1 PW.1

| Name | திரு.கோவிந்தராஜ் | Father / Husband Name | முருகன் |
|---|---|---|---|
| Village | மேலூர் | Taluk | திட்டக்குடி |
| District | கடலூர் | Age | 23 |
| | | Time | 12.30 |

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 07.05.2026 நாளாகிய இன்று திரு..M.ஆசிப் முகமது பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**1 முதல் 4 எதிரிகள் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் மேலூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் டிராவல்ஸில் கண்டக்டராக வேலைசெய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 23–04–2024 ம் தேதி இரவு 10.30 மணியளவில் என் பாட்டி ஊரான டி.அகரம் செல்வதற்காக இருச்சக்கர வாகனத்தில் எனது நண்பர்களான ரஞ்சித் மற்றும் விக்ரம் ஆகியோருடன் பெண்ணாடத்திலிருந்து டி.அகரம் சென்றபோது அப்போது இரவு 11.30 மணியளவில் டி.அகரம் மாரியம்மன்கோவில் அருகே சென்றபோது அங்கு நின்றுகொண்டிருந்த நான்கு தெரியாத நபர்கள் எங்களை வழிமறித்து அசிங்கமாக தகாத வார்த்தைகளால் திட்டி, என்னையும், எனது நண்பர் ரஞ்சித் குமாரையும் யார் அடித்தார்கள் என்று சரியாக தெரியவில்லை. யார் கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று தெரியவில்லை. அடிப்பட்ட நான் அரியலூர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது பெண்ணாடம் போலிஸார் என்னை விசாரித்து புகார்வாக்குமூலம் பெற்றார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்,து என்னுடையதுதான் அதில் உள்ள விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. 26–04–2024 தேதியிட்ட புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து **அசா.ஆ.1** ஆகும் இந்த வழக்கு சம்மந்தாக போலிஸார் என்னை விசாரணைசெய்யவில்லை ( தற்போது எதிரிகளுடன் சமாதானமகாக போவதால் சமாதான மனுவில் நான் கையொப்பம்செய்துள்ளேன்.)

**அரசு தரப்பில்சாட்சி சம்பவத்தை சாட்சி புகாரிலும், போலிஸாரின் விசாரணையிலும் போலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துவிட்டு எதிரிக்கு பவ்வியப்பட்டு மறைத்து சாட்சியம் அளிப்பதால் பிறழ்சாட்சியாக பாவிக்க கோரினார் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சிய ச.பி 154(1) ( பி.எஸ்.ஏ பிரிவு 157(1) ) கீழ் குறுக்கு விசாரணை**

1. கடந்த 23–04–2024 அன்,று இரவு 10.30 மணியளவில் பெண்ணாடம் டாப் டக்கர் துணி

கடையில் வேலைசெய்யும் எனது நண்பர்களான ரஞ்சித்குமார் மற்றும் விக்ரம் ஆகியோருடன் விக்ரமுக்கு சொந்தமான இருச்சக்கர வாகனத்தில் எனது பாட்டி ஊரான டி.அகரம் செல்வதற்காக டி.அகரம் மாரியம்ஙமன்கோவில் அருகே இரவு 11.30 மணியக்கு சென்றபோது ஆஜர் எதிரிகள் எங்களை வழிமறித்தார்கள் என்று சொன்னால் ? சரியல்ல.

2. ஆஜர் எதிரிகள் எங்களை பார்த்து அசிங்மாக தகாத வார்த்தைகளால் திட்டி, எதிரி ராமலிங்கம் கீழேகிடந்த மரக்கட்டையை எடுத்து எனது தலையில்அடித்தார் என்றாலும், எதிரி ஸ்ரீராம் கீழேகிடந்த பிளாஸ்டிக்கை எனது கையில் அடித்தார் என்றாலும் மற்றும் மற்ற எதிரிகளான தமிழ்குமரன், ஞானசேகரன் என்னை கையாலால் அடித்தார்கள் என்றுசொன்னால் ? சரியல்ல.

3. அப்போது தடுக்க வந்த எனது நண்பர் ரஞ்சித்த குமாரை எதிரிகள் அசிங்கமாக தகாத வார்த்தைகளால் திட்டி, எதிரி தமிழ்குமரன் கையால் அடித்து கீழேஇடித்து தள்ளினார் என்றாலும், எதிரிகள் அனைவரும் ஒன்றுசேர்ந்துகொண்டு எங்களை பார்த்து கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று சொன்னால் ? சரியல்ல.

4. அடிப்படம் நான் அரியலூர் மருத்துவமணையில் சிகிச்சையில் இருந்தபோது பெண்ணாம் போலிஸார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றாலும், நான் புகார் வாக்குமூலத்திலும், போலிஸார் விசாரணையிலும் அனைத்து உண்மைகளையும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக போவதால் எதிரிகளை காப்பாற்றுவதற்காக பிறழ்சாட்சியாக மாறி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் ? சரியல்ல.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**

**TYPED TO MYDICTATION OPENCOURT INPRESENCE OF ACCUSED READOVER TO THE DEPONENT AND ADMITTED BY HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
**TITTAGUDI**